★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 மாசி 16 [illegible]வ். 14 இதழ் 18

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 28—2—83

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

★ யாழ். பொதுசன நூலக நிதி:

# 22 நாடுகளிலிருந்து உதவி; ரூ. 32 லட்சம் சேர்ந்தது!

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுசன நூலக நிதிக்கு கடந்த டிசம்பர்வரை மொத்தமாக 32,61,589 ரூபா 25 சதம் கிடைத்துள்ளதாக யாழ் மாநகராட்சி மன்ற முதல்வர் திரு இராஜா விசுவநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகராட்சி மன்ற மாதாந்தப் பொதுக்கூட்டத்தில் திரு. யோ. அ. செல்வநாயகம் கேட்டுக்கொண்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"22 வெளிநாடுகளிலிருந்து 8,40,411 ரூபா 45 சதமும், உள்நாட்டிலிருந்து 24,01,251 ரூபா 71 சதமும் கிடைத்துள்ளதென்று தெரிவித்த முதல்வர் திரு. இராஜா விசுவநாதன், யாழ் மாநகராட்சி மன்ற ஊழியர் நிதியாக 19,566 ரூபா சேர்ந்திருப்பதாகவும் சொன்னார். (மா)

## அபி சபை இன்று கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின் மாதாந்தப்பொதுக் கூட்டம் மாவட்ட சபைத் தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் இன்று காலை நடைபெறவுள்ளது.

யாழ் செயலக சாமண்டபத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன. (ம)

# வட்டுக்கோட்டை கூட்டணி எம். பி.யாக 'நீலன்' தெரிவு?

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை எம். பி நியமனம் தொடர்பாக, தமிழர் விடுதலைக் கூட்டணி நியமக்குழு இன்றுகூடி முடிவுசெய்யும்.

இது சம்பந்தமாக எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கத்துடன் 'ஈழநாடு' நேற்றுப் பிற்பகல் தொடர்புகொண்ட போது வட்டுக்கோட்டை எம் பி. யாக இதுவரை யாரையும் நியமிக்கவில்லை என்றும் (நாளை) திங்கட்கிழமை தலைமை அலுவலகமான தெல்லிப்பழையில் நியமனக்குழு கூடி முடிவுசெய்யு மென்றும் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் நியமனக்குழு கூடியதாகவும், திரு நீலன் திருச்செல்வத்தை நியமிப்பதாகவும் வதந்திகள் பரவியுள்ளது என்றும் கேட்டபோது, "நியமனக்குழு கூடியபோதிலும் எதுவித முடிவும் எடுக்கவில்லை" என்று எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்திச் சொன்னார்.

நியமனக்குழுத் தலைவரான திரு எம். சிவசிதம்பரத்துடன் தொடர்பு கொண்டபோது இது சம்பந்தமாக எதிர்க்கட்சித் தலைவருடன் தொடர்பு கொள்ளுமாறும், இதுவரை எதுவித முடிவும் எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை எம். பி. நியமனம் தொடர்பாக இருவருடைய பெயர்களே கடைசி நேரத்தில் கடுமையாகப் பிரஸ்தாபிக்கப்பட்ட போதிலும், பலரது ஆதரவையும் பெற்ற திரு நீலன் திருச்செல்வமே வட்டுக்கோட்டை எம். பி யாக இன்று நியமிக்கப்படலாம் என்று நம்பப்படுகிறது.

திரு. நீலன்திருச்செல்வத்துடன் "ஈழநாடு" நேற்று தொடர்பு கொண்டபோது கட்சிக்கு தாம் மிகவும் கட்டுப்பட்டவன் என்றும் கட்சி எடுக்கும் முடிவை தாம் ஏற்றுக் கொள்வதாகவும்

[10-ம் பக்கம் பார்க்க

★ இயந்திரக் கோளாறு இல்லை ★ விமான ஓட்டியும் தவறுவிடவில்லை

# உபாலி விமானம் நாசவேலை காரணத்தை நிராகரிக்க முடியாது - 'லலித்'

## "800மைல் வேகத்தில்பறந்து விமானம் நீரிணையில் விழுந்திருக்கலாம்"

(கொழும்பு)

உபாலியின் லியர் ஜெட் விமான விபத்துக்கு இயந்திரக் கோளாறே, விமானியின் தவறே காரணமல்ல என்று வர்த்தக, கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

நாசவேலை காரணமாக விமானம் விபத்தில் சிக்கியிருக்கலாம் என்ற கருத்தை முற்றாக நிராகரிக்கமுடியாதென்றும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக மலேசியாவிலும், இந்தோனேஷியாவிலும் விசாரணைகளைமேற்கொண்டதன் பின்னர் நாடு திரும்பிய அமைச்சர் திரு அத்துலத்முதலி இவ்விரு நாடுகளிலும் தாம் மேற்கொண்ட நடவடிக்கைகள்பற்றி ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனாவிடம் எடுத்துரைத்தார்.

### 800 மைல் வேகத்தில்

சாதாரணமாக 400 மைல் வேகத்தில் செல்லும் லியர் ஜெட் விமானம் திடீரென 800 மைல் வேகத்தில் சென்று மலாக்கா நீரிணையில் விழுந்து நொருங்கியிருக்கலாமெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதில் பிரயாணம்செய்தவர்கள் உயிர் தப்பியிருக்கலாமென கருத முடியாதென்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

### நாடாவில் பதிவானது

"உபாலி விமானம் 800 மைல் வேகத்தில் சென்றதாகவும், அப்போது அது 27,000 அடி உயரத்தில் பறந்ததாகவும், பட்டர்வோத் விமானத்தளத்திலுள்ள வீடியோ நாடாவில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

'விமானத்திற்கு ஆபத்து ஏற்பட்டமையினாலேயே அது ஒலியை விட வேகமாகப் பறந்து இரு நிமிடங்களுக்குள் சமுத்திரத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியிருக்கலாம்.

### கோளாறு இல்லை

உபாலி விமானம் புறப்படுவதற்கு முன்னர் சிங்கப்பூரில் திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், அதன்பின்னர் சிங்கப்பூரில் விமானம் ஒரு மணி நேரமாலம் பறந்ததாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

"சிங்கப்பூரிலிருந்து கோலாலம்பூருக்கு விமானம் 45 நிமிடங்களில் வந்துசேர்ந்துள்ளது. கோலாலம்பூரில் வைத்து காப்டன் ஆனந்தப்பா

(10-ம் பக்கம் பார்க்க)

## கிராமிய ரீதியிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று ஆரம்பம்

[மட்டக்களப்பு]

தமிழீழ விடுதலைக்கழகத்தின் கிராமிய ரீதியிலான உண்ணாவிரதப் போராட்டம் ஏறுவூரில் நேற்று ஆரம்பமானது.

பயங்கரவாததடைச்சட்டத்தை நீக்குமாறும், தமிழ்ப் பகுதிகளிலிருந்து இராணுவத்தை அகற்றுமாறும் கோரி மேற்படி உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

நேற்று ஆரம்பமானஉண்ணாவிரதத்தில் திரு இரா. வாசுதேவா, திரு. யோகன் கண்ணமுத்து, மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு எஸ். சம்பந்தமூர்த்தி ஆகியோர் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

## கூட்டணி பொதுச்சபை 5-ல் கூடுகிறது

[மட்டக்களப்பு]

தமிழர் விடுதலை கூட்டணியின் பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை 5-ம் திகதி மட்டக்களப்பில் நடைபெறுகிறது.

அன்றைய தினம் செயற்குழுவும் கூடும்.

தமிழர் விடுதலை கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் சனிக்கிழமை மாலை நடைபெறும் பொதுச் சபைக் கூட்டத்தில் கூட்டணியின் மாநில மாநாட்டுக்கான திகதி குறித்து முடிவு செய்யப்படும்.

இக்கூட்டம் பட்டிருப்பு எம் பி. திரு. பூ. கணேசலிங்கத்தின் மட்டக்களப்பு இல்லத்தில் நடைபெறும்.

## சங்கக்கூட்டத்தில் கைகலப்பு; பலர் காயம்

(கொழும்பு)

ஸ்ரீ கொத்தாவில் நேற்று நடைபெற்ற ஜாதிக சேவக சங்கமய கூட்டத்தின் ஆரம்பத்தில் வாக்குவாதம் ஏற்பட்டு, பின்னர் அது மோதலாகமாறி கைகலப்பில் முடிவடைந்தது:

இச்சம்பவத்தில் பலர் காயமடைந்தனர்.

அருகிலிருந்த வாகனங்களுக்கும் சேதமேற்பட்டது.

இதனையடுத்து அங்கு பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்

## இன்று ஆரம்பமாகும் மகாயாகம்

(யாழ்ப்பாணம்)

நாடும் மக்களும் சுபிட்சமடைய கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவிலில் மஹா யாகம் இன்று தொடக்கம் மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

இந்து கலாசார பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை இந்த மஹா யாகம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் ஆசியுடன் சுவாமி அவர்களின் பிரதிநிதி ஸ்ரீலஸ்ரீ வத்தூர் சாஸ்திரிகள் இம் மகாயாகத்தில் கலந்து கொள்ள இங்கு வந்துள்ளார்.

இரவு சங்கீதக்கச்சேரிகளும் நடைபெறவுள்ளன, (ம)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வண்ணார்பண்ணை பன்றிக்கோட்டுப்பிள்ளையார் கோவிலிற்குரிய காணி ஆறுகால் மடத்தடிக்கு அருகில் நெற்பரப்பு 47 குளி 2 விற்பனைக்கு உண்டு. தேவைப்படுவோர் இன்றிலிருந்து 14 நாட்களுக்குள் தங்கள் விண்ணப்பங்களை விலையையும் குறித்து சமர்ப்பிக்கவும் இல 418, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23441, வி. எஸ் இராமனுதர், தனதிகாரி, தர்மகர்த்தாசபை. 629

வண்ணார்பண்ணை 859. K. K. S. வீதியிலுள்ள காணியின் ஒரு பகுதி (சுமார் 2 1/2 பரப்புக்கள் அடங்கிய இரு துண்டுகள்) விற்பனைக்கு உள்ளன. விபரத்திற்கு சட்டத்தரணி திரு. ஏகாம்பரநாதன், சன்னதி வீதி, அச்சுவேலி, அவருடன் தொடர்புகொள்ளவும். 6356

நல்ல இனத்தைச் சேர்ந்த அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. சேவியர் (யாழ்ப்பாணம் மானிப்பாய் மெயின் வீதி) ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை, சங்கக்கடை உடன் இருக்கும் வதிவிடம். 6353

K K S. சந்தியில் இருந்து பலாலி வீதியில் 100 யார் தூரமளவில் துறைமுக நுழைவாயில் முன்பாக பிரபல வியாபாரத்திற்குரிய கடைக் கட்டடம் விற்பனைக்குண்டு. கூடுதலான விலை கோருபவர்களுக்கு முதலிடம் அளிக்கப்படும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: மு. நாகேந்திரம், மே/பா ஈஸ்வரி ஹாட்வெயர், சுன்னாகம். தொலைபேசி இல: 348. (6360)

## தேவை

நெசவு வேலை தெரிந்த பெண்நெசவாளர்கள் தேவை மாதம் பூராவும் வேலை உண்டு. விடுதி பாதுகாப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி திருமதி பா. தம்பிராசா மாதகல் மேற்கு மாதகல். 6346

யாழ்நகரில் பிரபல்யமான ஸ்தாபனம் ஒன்றிற்கு ஆங்கில தட்டெழுத்தும் கணக்கியலும் தெரிந்த பெண் தேவை விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 6347 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 6347

## பயிற்சி

கஜன் தொழில் நுட்பப் பயிற்சி 1-3-83-ல ஆரம்பமாகின்றன எலக்றிக் வெல்டிங் (Arc and Gas) எலக்றி வயரிங், பிற்றிங், P M G'S ரான்ஸிஸ்ரர் தொழில் நுட்பம், கட்டிடக்கலை படம்வரைதல், ஆங்கில உரையாடல் முதலியன. 555, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம் 6355

## காணி தேவை

யாழ். மத்திய பஸ் Bus) நிலையத்துக்கு ஒரு மைல் சுற்றளவு தூரத்துக்குள் காணி உடன் தேவை. கட்டிடத்துடன் இருப்பின் விரும்பத்தக்கது தொடர்புகொள்க: விளம்பர இல. 6354. ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 6354

---

சங்கானை பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம் வெற்றுச்சாக்கு

## கேள்வி விளம்பரம்

சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் தரம்பிரிக்கப்பட்ட 4013 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்குண்டு. வைப்புப்பணமாக ரூபா 250/- செலுத்தி விண்ணப்பப்படிவம் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்கள் பதிவுத்தபால் மூலம் இடது பக்க மேல் மூலையில் 'வெற்றுச்சாக்கு கேள்வி' என எழுதப்பட்டு 'பொதுமுகாமையாளர், சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி 7-3-83.

பொதுமுகாமையாளர்

சங்கானை,
25-2-83. 6350

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

கோப்பாய் என்னும் இடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற இளைய தம்பி கந்தையாவினது மரணசாதனமற்ற விடயத்தில்.

கந்தையா சிவபாலசுந்தரம், 'இரத்தினவில்லா' பழந்தெரு, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

மனுதார்.

வழ. இல. 36/4/தத்துவம்.

எதிராக

1. கந்தையா மகேந்திரராசா,
2. கந்தையா தெய்வேந்திரராசா,
3. கந்தையா சுரேந்திரராசா, மூவரும் 'இரத்தினவில்லா' பழந்தெரு. கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
4. இளையதம்பி இராசையா, 'இரத்தின வாசம்' (பராயமற்ற 3ஆம் எதிர்மனுதாரின் வழக்குப் பாதுகாவலர்)

எதிர்மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச்சொத்து வழக்கு, மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்சொல்லப்பட்ட நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு பங்குனி மாதம் 18ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்காகக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1983ம் ஆண்டு மாசி மாதம் 18ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
தா. குலஞானம்,
பதிவாளர்.

தயாரித்தவர்கள்.
பரராஜசிங்கமும்
அம்பிகைபாலனும்
மனுதாரின் சட்டத்தரணிகள். 6357

---

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

தெல்லிப்பழை கொல்லங்கலட்டியைச் சேர்ந்த பூதப்பிள்ளை கனகநாயகத்தின் மரணசாதனமற்ற சொத்துக்கள் பற்றிய விடயம்...

மரணமெய்தியவர்

பூதப்பிள்ளை கைம்பெண் கதிராசிப்பிள்ளை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.

மனுதார்

வழ. இல. தத்துவம்/146

எதிராக

1. கந்தசாமி தம்பித்துரையும்,
2. பெண் சிவபாக்கியமும்,
3. பூதப்பிள்ளை மகள் தங்கம்மா,
4. பூதப்பிள்ளை காசிநாதன்,
5. பூதப்பிள்ளை செல்வநாயகம்,
6. பூதப்பிள்ளை வயிரவநாதன்.
7. பூதப்பிள்ளை வயித்திலநாதன்,
8. பூதப்பிள்ளை சண்முநாதன்,
9. காசிநாதன் ஜெயரவீந்திரனும்,
10. பெண் பரமேஸ்வரியும், எல்லோரும், கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.

எதிர் மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு மாசி மாதம் 16 ஆந் திகதியன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றில் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1982ம் ஆண்டு மார்கழி மாதம் 16 ஆந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
சு. வ. கணேசன்
பதிவாளர்

தயாரித்தவர்
V. S. கணேசலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி.

காரணம் காட்டும் திகதி 1983-05-18ம் திகதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளைப்படி
ம. சி. சிவசாமி
பதில் பதிவாளர்
21-02-83
6348

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

---

# இன்றைய பலன்

மாசி மாதம் 16-ம் திகதி
திங்கட்கிழமை
(26—2—83)

மேடம்: பேட்டி காண்பதற்கு ஏற்றதினம், தொழில் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றத்திற்கு வழிகோலப்படலாம், பிறரின் உறவினர் வருகையும் உண்டு.

இடபம்: தங்கள் குணம் மேலிடும், தக்க மதிப்பும் கிடைக்கும், இனத்தவர்களுடன் தொடர்புகள் பெருகும், உழைப்பினுல் பலனும் உற்சாகமும் பிறக்கும், முன்னேற்றமான தினம்.

[9ம் பக்கம் பார்க்க]

HONDA 400 CC TWIN

வெளிநாட்டவரினுல் பேணப்பட்ட Honda 400 CC Twin MB 100 விற்பனைக்குண்டு. நிதி உதவி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். பார்வையிடவேண்டிய முகவரி.

**SHABRA**

207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
6349

## தேவை

1. விற்பனைப் பிரதிநிதி:
விற்பனைகளைக் கையாளுவதற்கும் ஜொறி செலுத்துவதற்கு சான்றிதழ் பெற்றவரும் நடுத்தர வயதுமுள்ளவரும் பிணைப்பணம் செலுத்தக்கூடியவருமாக இருத்தல் வேண்டும். முன் அனுபவம் விரும்பத்தக்கது. விண்ணப்பங்கள் சொந்த கையெழுத்தில்.
2. குளிர்சாதனப்பெட்டி ஏர்கொண்டிசன் திருத்துபவர்கள்:
முன் அனுபவம் முக்கியம்
3. குளிர்சாதனப்பெட்டிகள், அலுவலக இயந்திரங்கள் பழுதுபார்ப்பதில் அனுபவம் பெற விரும்புபவர்கள்:
ஆற்றலுள்ளவர்களும் வேலை பழகும் காலத்திற்கு ரூபா இரண்டாயிரம் செலுத்த விருப்பமுள்ளவர்களுக்கு மட்டுமே முன்னுரிமை வழங்கப்படும்.

(1, X 2 க்கும் எதிர்பார்க்கும் ஊதியத்தை குறிக்கவும். நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

**சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்**

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

அமரர்

## முத்தையா ஜோர்ஜ் நவரத்தினராஜா அவர்களின்

## 31-ம் நாள் நினைவாஞ்சலி



28-2-1983 இன்று

எம்மை ஆருந்துயரில் ஆழ்த்தி மறைந்து ஒரு மாதம் ஆகின்றது.

தங்கள் ஆத்மா சாந்தி அடையபிரார்த்திக்கிறேம்.

மேலும் அன்னாரின் மரணச் சடங்குகளில் கலந்துகொண்டவர்கட்கும், அனுதாபச் செய்திகள், மலர்வளையங்கள் அனுப்பியவர்கட்கும், பண்டத்தரிப்பு தென்னிந்திய கிறிஸ்தவ திருச்சபையாருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேம்.

இங்ஙனம்

அப்பா, அம்மா,
சகோதர சகோதரிகள்,
மச்சான்மார், மச்சாள்மார்,
பிள்ளைகள்.

6358

---

## வட்டு. லயன்ஸ் கழகம் நடாத்தும் புதிய வகுப்புகள்

★ I. D P M (LONDON) பரீட்சை யூன்/ஜுலை 1983 கட்டணம்: ரூபா 600-00 மட்டுமே.
★ COMPUTER PROGRAMMING WITH PRACTICALS 6 மாத காலப் பயிற்சி, கட்டணம் ரூபா 1500-00

வகுப்புகள் 4-03-1983 முதல் ஆரம்பமாகின்றது.

புதுமுகப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறும் பத்து மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்.

விரிவுரை நடைபெறும் இடங்கள்!

வட்டு. தொறண்டம்,
**தொழில் பயிற்சி நிலையம்,**
2-ம் மாடி மணியம் கட்டிடம், 15, சிறும்பியடிலேன்,
(ஸ்ரீதர் தியேட்டர், நாவலர் அண்மையில்)
யாழ்ப்பாணம்.

**தொழில் பயிற்சி நிலையம்,**
சித்தன்கேணி,
வட்டுக்கோட்டை.

(6359)

'தியாகோகாஸியா' விவகாரம்

# 'மொரீஷியஸுக்கு அணிசேரா இயக்க ஆதரவு புதுடில்லியில் உறுதிப்படுத்தப்படும்!'

## --நரசிம்மராவ்

புதுடில்லி, பெப். 27

"தியாகோகாஸியா தீவை மீட்டெடுப்பதற்கான மொரீஷியஸ் தீவின் முயற்சிகளுக்கு அணிசேரா இயக்கத்தின் பூரண ஆதரவு புதுடில்லியில் நடைபெறவுள்ள உச்சிமகாநாட்டில் உறுதிப்படுத்தப்படும்" என்று இந்திய வெளிவிவகார மந்திரி திரு கே பி நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் புதுடில்லியில் தொலைக்காட்சியில் அவர் உரையாற்றினார். அப்போதே நேர்காண்ட கருத்தையும் அவர் தெரிவித்தார். திரு. நரசிம்மராவ் மேலும் கூறியதாவது:—

"மொரீஷியஸ் தியாகோகாஸியா மீது உரிமைகோர நியாயமுண்டு. அதன் கோரிக்கைக்கு அணிசேரா நாடுகளின் ஆதரவும் இருந்துவருகிறது. புதுடில்லி மகாநாட்டில் இக்க ஆதரவு முழுஅளவில் உறுதிப்படுத்தப்படும்.

தியாகோகாஸியா தற்போது பிரிட்டனின் காலனித்துவ தீவாக இருக்கின்றது. அமெரிக்கா அதனைக் குத்தகைக்குப் பெற்று தனது இராணுவ தளத்தை அங்கு அமைத்துள்ளது. இத்தகைய நடவடிக்கை இந்து மாகடலில் யுத்தபீதி ஏற்பட வழிவகுக்கின்றது.

எனவே அமெரிக்க இராணுவத் தளத்தை தியாகோகாஸியாவிலிருந்து அகற்றும் யோசனைக்கும் அணிசேரா இயக்க நாடுகள் பூரண ஆதரவு வழங்கும்.

கம்பூச்சியா, ஆப்கானிஸ்தான் பிரச்சினைகள்பற்றியும் புதுடில்லி மகாநாட்டில் ஆராயப்படும். அந்த நாடுகளில் வெளிநாட்டுத் துருப்புகள் இருந்துவருவதே பிரச்சினைகள் அதிகரிக்க ஏதுவாக இருக்கின்றன. எனவே வெளிநாட்டுத் துருப்புகள் உடனடியாக அந்நாடுகளிலிருந்து வாபஸ்பெற வேண்டும். இதுகுறித்தும் அணிசேரா நாடுகள் முடிவெடுக்கும்.

இவைதவிர அணிசேரா நாடுகள் தமது பிரச்சினைகள் குறித்து மகாநாட்டில் கலந்துகொள்ள வரும் ஐ. நா. பொதுச்செயலாளர் திரு. ஜாவியர்பெரஸ்டி கொய்லருடன் விவாதிக்கவும் சந்தர்ப்பம் வழங்கப்படும். அணிசேரா இயக்க நாடுகளின் பொருளாதார மேம்பாடு குறித்து புதிய பொருளாதார யோசனைகளும் முன் வைக்கப்படும்" என்றார். (கி)

## புனர்வாழ்வுத் திட்டம்

சென்னை, பெப். 27

இலங்கையிலிருந்து தமிழ் நாடு வந்துள்ள இந்திய வம்சாவழியினர் உட்பட சுமார் 500க்கும் அதிகமானவர்கள் பயனடையும் வகையில் புனர்வாழ்வுத் திட்டமொன்றை தவத்திரு குன்றக்குடி அடிகளார் வகுத்துள்ளார்.

இத்திட்டத்திற்கென 80 ஹெக்டேர் நிலம் பயன்படுத்தப்படவுள்ளது. இந்த நிலத்தில் வீட்டு வசதிகளுடன், பயிர்ச்செய்கைக்கான வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

சுமார் 700 பேர் சுயவேலைவாய்ப்பினை இத்திட்டத்தின் மூலம் பெற முடியுமென்று தவத்திரு குன்றக்குடி அடிகளார் தெரிவித்தார். (கி)

## சிறைச்சாலைக் கூரையில் கூத்தடித்த பெண்கள்!

லண்டன். பெப் 27

லண்டன் நகரச் சிறைச்சாலையொன்றின் கூரைமீது ஏறி ஆறு இளம் பெண்கள் பாட்டுப்பாடி கூத்தாடினர்!

இந்தப் பெண்கள் கைதிகள் என்பது குறிப்பிடத்தக்கது! அணுஆயுத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காகவே இவர்கள் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்!

தாம் இருந்த சிறைச்சாலை அறையின் மேற்கூரையை அவர்கள் அகற்றியே மேலே ஏறினர்! பின்னர் அந்த ஓடு மாடிக் கட்டிடத்தின் மீது நின்று பாட்டுப்பாடி கூத்தடித்தனர்.

சுமார் இரண்டரை மணித்தியாலங்கள்வரை அவர்கள் இவ்வாறு நடந்து கொண்டனர்! பின்னர் சிறைச்சாலை அதிகாரிகள் சிரமப்பட்டு அவர்களைக் கீழே கொண்டு வந்தனர்!

சுமார் 36 பெண்கள் அணுஆயுத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக அச்சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்! (கி)

டெஸ்ட்

## மேற்கிந்தியா 1-வது இன்-254 இந்தியா 2 வது இன் 3-81

கிங்ஸ்டன் பெப் 27

இந்திய – மேற்கிந்திய கிரிக்கெட்டெஸ்ட்டின் மூன்றாவது நாளான நேற்று மேற்கிந்திய அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கட்டுகளையும் இழந்து 254 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இந்த எண்ணிக்கை இந்திய அணியின் முதலாவது இன்னிங்ஸ் எண்ணிக்கையைவிட 3 ஓட்டங்கள் கூடுதலானதாகும்.

இரண்டாவது இன்னிங்ஸில் இந்திய 3 விக்கட்டுகள் நட்டத்துக்கு 81 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. சுனில் கவாஸ்கர் ஓட்டமெதுவுமின்றி ஆட்டமிழந்தார்.

இவரை ஆட்டமிழக்கச் செய்த பந்து இடப்பக்க விக்கட்டை மேலெழுந்து வண்டிச்சக்கரம் போல் சுழலச் செய்தது. [கி]

## "திறமைசாலிகளை நீதிபதிகளாக நியமிக்க விசேட கமிட்டிகள் தேவை!"

## –இந்தியப்பிரதம நீதியரசர்

புதுடில்லி பெப். 27

"திறமைசாலிகளை நீதிபதிகளாக நியமிப்பதற்கு சிரேஷ்ட நீதிபதிகளையும் வழக்கறிஞர்களையும் கொண்ட விசேட கமிட்டிகள் அமைக்கப்படவேண்டும். இதில் பொதுமக்களுக்கும் இடம் தரப்படவேண்டும்."

இவ்வாறு இந்திய பிரதம நீதியரசர் திரு. வை. வி. சந்திரசூட் பட்னாவில் நடைபெற்ற நீதிச்சேவை பற்றிய கூட்டமொன்றில் கூறினார்.

நீதியரசர் சந்திரசூட் மேலும் கூறியதாவது சிறந்த நீதி வழங்கப்பட வேண்டுமானால் தகுதிவாய்ந்தவர்கள் நீதிபதிகளாக அமைக்கப்பட வேண்டும்' இவ்வாறு திறமைசாலிகளை நீதிபதிகளாகத் தேர்ந்தெடுப்பதற்கு சிரேஷ்ட வழக்கறிஞர்கள், நீதிபதிகள், பொதுமக்கள் உட்பட ஒன்பது பேரடங்கிய விசேட கமிட்டிகள் அமைக்கப்பட வேண்டும். இக்கமிட்டிகளின் சிபார்சுகளுக்கமையவே நீதிபதிகளின் நியமனம் இருக்க வேண்டும்.

இந்தியாவில் ஏழைகளுக்கும் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்களுக்கும் சிறந்த நீதிச்சேவை வழங்கப்படுகிறது என்றார். [கி]

## சங்கானை சிகரட்வான் கொள்ளை வழக்கு கொழும்புக்கு மாற்றம்

(மாவிட்டபுரம்)

சங்கானையில் வைத்து சிகரட்வானை வழிமறித்து 10 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்தது தொடர்பான வழக்கு, கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட இருப்பதாக அரசதரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1970–ஆம் ஆண்டு ஜூலை 14ம் திகதி சங்கானையில் வைத்து யாழ். கூட்டுறவு வியாபாரச் சங்கத்திற்குச் சொந்தமான சிரட் விநியோக வானை மறித்து 10 ஆயிரம் ரூபா பணத்தை ஆயுதமுனையில் கொள்ளையடித்தது தொடர்பாக உருப்பராயைச் சேர்ந்த சதாசிவம் சதானந்தசிவம் அல்லது ஆனந்தன், சாவகச்சேரியைச் சேர்ந்த முத்துக்குமாரு வரதலிங்கம், குருநகரைச் சேர்ந்த நிமால் ஜெயசுந்தர ஆகியோர் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடப்பட்டிருந்தனர்.

பின்னர் இம்மூன்று சந்தேக நபர்களும் தலைமறைவாகியதையடுத்துப் பொலிசார் இவர்களைத் தேடிவந்தனர். முதலாவது நபரான ஆனந்தனை யாழ். பொலிசார் கிளிநொச்சிக் காட்டில் வைத்துக் கைது செய்ததையடுத்து இவர் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார்.

யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் மேற்படி சிகரட்வான் கொள்ளை வழக்கு விசாரணைக்கெடுக்கப்பட்ட சமயம், றிமாண்டில் இருக்கும் ஆனந்தன் மட்டும் நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தார். ஏனையோர் தலைமறைவாகிவிட்டதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

தலைமறைவாகிய சந்தேக நபர்கள் முன்னர் தலா 2000 ரூபா பிணையில் விடப்பட்டிருந்ததால் அவர்களது பிணைப் பணத்தைத் தண்டமாக அறவிடுமாறு நீதிபதி உத்தரவிட்டார். இரண்டாம் சந்தேகநபரின் பிணையாளி ஆயிரம் ரூபாவை இந்தத்தவணை செலுத்துவதாகவும், மிகுதியை அடுத்த தவணை செலுத்தனுமதிக்குமாறும் சட்டத்தரணி ஜிம்மி இராஜரத்தினம் கோரியதையடுத்து நீதிபதி அதற்கு அனுமதி வழங்கினார்.

இதையடுத்து ஆனந்தன் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மனோ. ஸ்ரீதரன் முதலாம் எதிரி தொடர்பான விசாரணையை ஆரம்பிக்குமாறு கோரினார் 2-ம், 3-ம் சந்தேக நபர்கள் தலைமறைவாகி இருப்பதன் காரணமாக வழக்கு விசாரணையைத் தாமதப்படுத்தக்கூடாதெனவும் அவர் கூறினார்.

இச்சமயம் அரச தரப்புச் சட்டத்தரணி ஐ. ஞானதாசன் ஏற்கனவே 1ம் எதிரி மீது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சென்னை வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் இவ்வழக்கையும் அந்த நீதிமன்றத்திற்கே மாற்ற இருப்பதாகவும் தெரிவித்தார்.

ஆனந்தன் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மனோ. ஸ்ரீதரன் இவ்வாறு கொழும்பு மேல்நீதிமன்றத்திற்கு வழக்கை மாற்றுவதுபற்றி எதிர்க்கு எவ்வித அறிவித்தலும் கிடைக்கவில்லையென்று கூறி இந்த நீதிமன்றத்திலேயே விசாரணை செய்ய வேண்டுமெனவும் கூறினார்.

இதையடுத்து நீதிபதி விசாரணையை ஏப்ரல் 25ம் திகதிக்கு ஒத்திவைத்து இதுபற்றிப் பின்னர் ஆராயலாமெனத் தெரிவித்தார். (வி)

அமெரிக்க, ஐரோப்பியர்

## பேய், பிசாசுகளை இப்போதும் நம்புகின்றனர்!

லண்டன் பெப். 27

பேய், பிசாசு போன்றவற்றில் நம்பிக்கை வைப்போர் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் இப்போதும் ஏராளமாகக் காணப்படுகின்றனர்.

இத்தகவலை பிரிட்டனின் ரோமன் கத்தோலிக்கப் பத்திரிகை யொன்று வெளியிட்டுள்ளது! அப்பத்திரிகை மேலும் தெரிவித்திருப்பதாவது அயர்லாந்தில் அரைவாசிக்கும் அதிகமானோர் துர்த்தேவதைகளை நம்புகின்றனர். சுமார் 90 சதவீதமானோர் அங்கு பாவம் செய்வது தீயவிளைவுகளைத் தருமென்று திடமாக நம்புகின்றனர். 34 சதவீதமானோர் மனிதப்பிறபி நற்பண்புகளின் இருப்பிடம் என்ற கோட்பாட்டைக் கொண்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## 'அணிசேரா மகாநாட்டுக்கு பாக்.பூரண ஆதரவுவழங்கும்'

## -ஜெனரல் ஹக்

புதுடில்லி,பெப்.27

"புதுடில்லி அணிசேரா மகாநாடு பூரண வெற்றிபெற பாகிஸ்தான் மனப்பூர்வமான ஆதரவுவழங்கும்" என்று பாக் அதிபர் ஜெனரல் ஸியாவுல் ஹக் தெரிவித்துள்ளார்.

புதுடில்லி மகாநாட்டைப் பற்றி அவர் வெளியிட்டுள்ள செய்தியிலேயே இதனை அவர் குறிப்பிட்டுள்ளார் ஜெனரல் ஹக் மேலும், அந்நிய இராணுவத் தளங்கள் தமது நாட்டில் அமைவதற்கு ஒரு போதும் அனுமதி வழங்கப்படமாட்டாதென்றும், இந்து சமுத்திரப் பகுதியில் அந்நிய இராணுவ நடமாட்டங்கள் ஏற்படுவதைத் தமதுநாடு ஆட்சேபிக்கின்றதென்றும் கூறியுள்ளார்.

இந்திய-பாக் உறவுகள் வலுப்பெறவும் இந்த மகாநாடு சந்தர்ப்பங்களை வழங்குமென்றும் அவர் குறிப்பிட்டார். (கி)

## தற்கொலை

(மட்டுவில்)

இளம் காதலர் இருவர் ஒருவரை ஒருவர் அணைத்தபடி வயல் வெளியில் இறந்து கிடக்கக் காணப்பட்டனர்.

மிருசுவில் உசனில் இப்பரிதாப சம்பவம் நடைபெற்றது.

கணபதி சிவராசா [28வயது) என்பவரும், சோதிப்பிள்ளை (19 வயது என்ற இளம் பெண்ணும் வயல்வெளியில் இறந்து கிடக்கக் காணப்பட்டனர் சாவகச்சேரிப் பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர். (மா)

### மணிவாக்கு

எல்லாரையும் நம்புவது சரியில்லைதான். அதே போல் ஒருவரையும் நம்பாமல் விடுவதும் சரியில்லை.

—பெனக்கா

# நமது நோக்கு

## வேடர் தலைவனின் கோரிக்கை

மகாவலி திசை திருப்பிப் பாயும் காட்டுப் பிரதேசத்தில் குடியிருந்த பல வேடுவக் குடும்பங்கள் வேறு இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளன. சுமார் 200 வேடர்கள் அண்மையில் நந்தேகல்வில என்ற இடத்துக்கு குடிமாறிப்போகும் நிகழ்ச்சியில் காணி, காணி அபிவிருத்தி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்காவும் கலந்துகொண்டார்.

வேடர்களின் தலைவன் திஸ்ஸஹாமி இந்த இடமாற்றத்துக்கு இணங்க மறுத்துவிட்டதாகச் செய்தி கூறுகின்றது. வெளிநாட்டு உல்லாசப் பயணிகளிடம் தன்னையும், தனது மக்களையும் வேடிக்கையாகக் காட்டிப் பணம் பெறுவதிலும், சொகுசாக வாழ்வதிலும் திஸ்ஸஹாமி மனங்கொண்டிருந்ததாகவும் அதனாலேயே ஏனைய வேடுவர்களுடன் சேர்ந்து கொள்ள அவர் மறுத்து விட்டதாகவும் கூறப்படுகின்றது. ஆனால் குடிபெயர்ந்துசென்றுள்ள வேடுவர்களின் சார்பில் அவர்களின் தலைவன் ஊறுவாரிகே பண்டியா விடுத்துள்ள கோரிக்கை உணர்ச்சி பூர்வமானது. அரசு உதாசீனம் செய்யக்கூடாதது.

"வேறு இடத்தில் குடியமர்த்துவதையும், வசதிகள் செய்து கொடுப்பதையும் வரவேற்கின்றோம். எங்கள் பிள்ளைகள் சிங்களத்தை மாத்திரமல்ல, எங்கள் சொந்த மொழியையும்கூடக் கற்றுக் கொள்வதற்கு வழி செய்து தாருங்கள். எமது புதுக்குடி அமர்வின் காரணமாக எமது மொழி அழிந்து போகாமலிருக்க ஏதாகிலும் செய்யுங்கள்" என்று பண்டியா அமைச்சரிடம் மன்றாட்டமாகக் கேட்டிருக்கிறார்.

வேடர்களுக்கு புது வீடுகளையும், நவீன வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுத்து நாகரிக மனிதர்களாக்க அரசு முயல்வதை பண்டியா சரியாகவே புரிந்து கொண்டு இருக்கிறார். தமது குழந்தைகளுக்கு சிங்களம் போதிக்கப்பட விருப்பதையும் உணர்ந்துகொண்ட நிலையிலேயே எதிர்காலத்தில் தங்களின் தனித்துவம் முற்றாக அழிந்துபோகாமலிருக்க தங்கள் மொழியைப் பாதுகாத்துத் தரும்படி கேட்கின்றார்.

ஒரு இனம் எவ்வளவு தான் சிறியதாகவிருந்தாலும் அதன் தனித்துவம் பேணப்பட வேண்டுமானால் முதலில் அதன் மொழி பாதுகாக்கப்பட வேண்டும்; தனித்துவமான கலைகலாசாரங்கள் வளர்ச்சியடைவதற்கு அதற்குரிய மொழி வளர்க்கப்படவேண்டும்.

சீனாவில் எழுத்துவடிவம் இல்லாத மொழிகளைப் பேசும் பல இனங்கள் உண்டு. அந்த மொழிகளையெல்லாம் எழுத்துருவில் தொகுத்து அதற்குரிய மக்களின் தனித்துவத்தைப் பேணுவதற்கு அங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இது போல் இங்குள்ள வேடர்களின் தனித்துவத்தைப் பேணவும் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வேடர்களுக்கென்று தனி அரசியல் கட்சியோ வேறு ஸ்தாபனமோ இல்லையென்பதற்காக கண்மூடித்தனமாக அவர்கள் மீது உத்தியோகமொழியைத் திணித்து அவர்கள் பல நூற்றாண்டு காலமாகப் பேணிவரும் கலை, கலாச்சாரங்களையும் மொழியையும் அழித்துவிட வேண்டாமென வலியுறுத்துகின்றோம்.

## நாடற்றவர்களுக்கு விமோசனம்

இலங்கைப் பிரஜாவுரிமையோ – இந்தியப் பிரஜாவுரிமையோ இன்றி நாடற்றவர்களாக இருந்துவரும் இந்திய வம்சாவளியினரின் பிரச்னையை விரைவில் முடித்துவைக்க வேண்டும் என்பது குறித்து அண்மையில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கிராமிய அபிவிருத்தித் துறை அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் தலைமையிலான குழுவுக்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தைகளின்போது இணக்கம் ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

இலங்கைப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்துவிட்டு பல வருடகாலமாக எதுவித முடிவும் இன்றி ஆயிரக்கணக்கானவர்கள் இன்னமும் காத்திருக்கிறார்கள்.

இலங்கையிலேயே பிறந்து வளர்ந்தவர்கள், சிறு வயதிலேயே இங்கு வந்துவிட்டு இந்த நாட்டையே தாயகமாக ஏற்றுக்கொண்டவர்கள், இன்னும் இலங்கையரைத் திருமணம் முடித்ததினால் திரும்பிப்போக முடியாதிருப்பவர்கள் என்று பலவிதமானவர்கள் இதில் அடங்குவர்.

இலங்கையரை மணம் முடித்தவர்கள் விடயத்தில் கடந்த காலத்தில் பாரபட்சமான ஒரு நடைமுறை கையாளப்பட்டது. ஆணாயிருப்பின் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படவும் பெண்ணாய் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படவும் சந்தர்ப்பங்கள் இருந்ததாகத் தெரிகின்றது.

ஒரு குறிப்பிட்ட காலம் வரை இந்த நாட்டில் வாழ்ந்து இந்த நாட்டிலே தனது சுகபோகங்களையெல்லாம் அமைத்துக்கொண்டுவிடும் ஒருவர் இங்கேயே சகலஉரிமைகளோடும் வாழ்வதற்கு வசதியில்லாதிருப்பது மிகவும் விசனத்திற்குரிய விஷயம்.

சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தக் காலக்கெடு முடிவடைந்து பல வருடங்களாகிவிட்டன. இரு அரசுகளுமே ஒப்பந்த ஏற்பாடுகளைச் சரியாக அமுல்படுத்துவதில் பின்தங்கிவிட்டதனால் நாடற்றவர்களின் நிலை பரிதாபமாகிவிட்டது.

இவர்கள் சுயமாகத் தொழில்களை அமைத்துக் கொள்ளவோ தனியார் – பொதுத் துறைகளில் வேலைபெறவோ முடியாமல் தவிக்கின்றனர். நாடற்றவர்களின் பிள்ளைகளின் உயர்கல்வியையும் கூட இது பாதித்து வருகின்றது. எனவே நாடற்ற மக்களின் பிரச்னையை வெகு விரைவில் தீர்த்து வைத்து அவர்களின் எதிர்காலத்தை சுபீட்சமுள்ளதாக்குவது இரு அரசாங்கங்களினதும் கடமையாகும்.

---

பாராளுமன்றத்தில் ........ இ. கந்தசாமி

# "வடக்கில் இயங்கும் விசேட ஆணைக்குழு!"

## தண்டனையும் தீர்ப்பும் ஒரே நேரத்தில் வழங்கப்படுவதாக பிரதமர் கூறினார்

வடக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் அங்கம்வகிக்கும் தொகுதிகளில் புதுவிதமான விசேட ஆணைக்குழு ஒன்று இயங்கிவருகிறது. அது எமது விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவைவிட மோசமான தண்டனையை வழங்குகிறது"

இவ்வாறு பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அதுபற்றி அவர் மேலும் கூறியதாவது: "கூட்டணியினரின் தொகுதி ஒன்றில் ஒருவர் அண்மையில் சுடப்பட்டார். அவரைக் கொலைசெய்வதற்காக அவர் சுடப்படவில்லையாம். அவருக்குப் பாடம்படிப்பிக்கவே அவர் சுடப்பட்டாராம்.

ஒருகுரல்: இது நீதிமன்றம் முன்உள்ள விடயம் இதுபற்றிக் கூறுவது நீதிமன்ற நடவடிக்கையில் தலையிடுவது போன்றது.

பிரதமர்: பத்திரிகைச் செய் செய்திகளையே கூறுகிறேன். பத்திரிகைச் செய்திகள் பற்றி இங்கு கூறக்கூடாதா?

"அவர்களின் விசேட ஆணைக்குழுவுக்கு குற்றப்பத்திரிகை இல்லை; சட்டத்தரணிகள் இல்லை; அந்த ஆணைக்குழு உறுப்பினர்கள் கார்களில் வரமாட்டார்கள். சைக்கிளில்வருவார்கள். தீர்ப்பையும் தண்டனையையும் ஒரே சமயத்தில் வழங்கிவிட்டுப் போய்விடுவார்கள்.

"டாக்டர் ஜலால்தீன் தொடர்பான பிரேரணை மீது பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணியினர் குறுகிய அரசியல் நோக்குடன் இனவாதரீதியில் பேசினார்கள்.

தமது பேச்சுக்கள் தமிழ் பத்திரிகைகளில் வெளிவர வேண்டும் என்பதற்காக தமிழ் மொழியில் இங்கு பேசி அதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டு இங்கிருந்து ஓடிவிட்டனர். நீண்ட உரையை நிகழ்த்திவிட்டு ஓடிய கூட்டணியினர் நான் பதில்உரை நிகழ்த்திய போது சபையில் இல்லை என்பது எனக்குக் கவலையைத் தருகிறது.

"கூட்டணியினர் அவ்வாறு பேசிய போதிலும் இப்பிரேரணை மூலம் பாதிக்கப்பட்டு சபையை விட்டு வெளியேறிய டாக்டர் ஜலால்தீன் தாம் அந்த இக்கட்டான நிலைக்கு வந்தது தனது மொழியினாலோ தாம் சார்ந்த இனத்தினாலோ அன்றி அரசாங்கத்தின் அநீதியான செயலினாலோ என்று கூறவில்லை. தமது மைத்துனர்கள், சகோதர இனத்தவர்களினாலேயே தமக்கு இந்நிலை ஏற்பட்டதாகக் கூறினார் டாக்டர் ஜலால்தீன் ஒரு சிங்கள எம்பியாக இருந்தால் இப்படிச் செய்வீர்களா? என்று கூட்டணியினர் கேட்டனர். டாக்டர் ஜலால்தீனின் மைத்துனர்கள், சகோதரர் சிங்களவர்களா?

"எதிர்க்கட்சித் தலைவர் இங்கு எவ்வாறு தான்முதலைக் கண்ணீர் வடித்தாலும் இப்பிரேரணையை இச்சபை ஏற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

---

# 'சரத்' வர்ணித்த

## 50 ஓவர் கிரிக்கெட்

அரசாங்கக் கட்சியினரின் இன்றைய நடவடிக்கையை கலவான எம். பி. திரு. சரத் முத்தெட்டுவேகம 50 ஓவர் கிரிக்கட் ஆட்டம் ஒன்றுக்கு ஒப்பிட்டார்.

பொத்துவில் முதலாவது எம். பி டாக்டர் எம். ஏ. எம். ஜலால்தீனுக்கு எதிராக பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையிலேயே திரு. சரத் மேற்கண்ட நகைச்சுவையைக் கூறினார்.

"50 ஓவர் கிரிக்கட் ஆட்டத்தில் நடப்பது போல் அரசாங்கக்கட்சியில் சிலர் விக்கட்டில் அவுட்டாகிறார்கள். சிலர் 'காச்' கொடுத்து அவுட்டாகிறார்கள். சிலர் 'எல்பிடபிள்யூ' விலும் சிலர் விக்கட்டுக்குப் பின் 'காச்' கொடுத்தும் அவுட்டாகிறார்கள். அந்த ஆட்டத்தில் டாக்டர் ஜலால்தீன் 'ரன் அவுட்' டாகிவிட்டார்.

"ஒரு தொகுதியில் முன்பு ஒரு முறை 133 ஆசிரியர்கள் அரசியல் வாதியின் தலையீட்டினால் இடமாற்றம் செய்யப்பட்டனர். எந்தத் தொகுதி என்பதை நான் கூறவிரும்பவில்லை. மற்றொரு தொகுதியில் தோட்டத்தொழிலாளர் பலர் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். தாம் வசித்த வீடுகளிலிருந்தும் அவர்கள் வெளியேற்றப்பட்டனர். இது பற்றி அரசபெருந்தோட்டப் பிரிவு உயர் அதிகாரிகளிடம் கேட்டபோது அதுபற்றி தமக்குத் தெரியாது என்றார்கள். இதற்கும் அரசியல் தலையீடே காரணம் இவை எல்லாம் அதிகார துஷ்பிரயோகம் இல்லையா? நல்லவேளை அந்த தோட்டத் தொழிலாளர்களுக்கு 3 லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்குமாறும் மீண்டும்வேலை வழங்குமாறும் தொழில் நீதிமன்றம் உத்தரவிட்டது. இப்பிரேரணை மீது வாக்கெடுப்பில் நான் கலந்து கொள்ளப் போவதில்லை.

---

### தவக்கால நற்சிந்தனை



## அன்பு செய்யுங்கள்

"நான் உங்களுக்கு அன்பு செய்ததுபோல் நீங்களும் ஒருவொருக்கொருவர் அன்புசெய்யுங்கள்"—இவை உமது வார்த்தைகள். எல்லோருக்கும் உமது அன்பைக் கொடுத்து ஓர் அன்பின் சமுதாயத்தை உமது வாழ்க்கையால் ஏற்படுத்தினீர்.

"உங்களை அன்பு செய்கிறவர்களுக்கே நீங்கள் அன்பு செய்தால் உங்களுக்கு என்ன கைமாறு கிடைக்கும்?" இது உமது கேள்வி. நாம் எமது வாழ்க்கையில் உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன் என்ற எந்தவிதமான பாகுபாடுமின்றி எல்லோரையும் அன்புசெய்து வாழ வரம் தாரும்.

அருட்செல்வன் ம. ரூபன்

---

## வள்ளுவரை வணங்கிடுவோம்

அவ்வுலகும் இவ்வுலகும் ஆய்ந்தார் ஆகி
அவனியினை உய்விக்கும் கருத்தை சந்தார்
செவ்விய நற்றமிழ் மகளின் அழகைஎல்லாம்
திருக்குறளாம் வடிவதனில் நமக்குத் தந்தார்
வெவ்வினையை உழைப்பதனை மானுடத்தின்
மேன்மையினை எல்லோர்க்கும் எடுத்துக் காட்டி
எவ்விதமும் நெறியதனில் நீங்கா வண்ணம்
ஏற்றமுற உழைத்திடுவீர் என்றார் அன்றே

அண்ணலவன் பதம்பிறப்பின் நோக்கம் என்றார்
அற்றார்க்கு நல்கிடுவோர் உயர்ந்தோர் என்றார்
பெண்ணினும் மேபெருந்தக்க உளதோ என்றார்
பேசுமின் சொற் பெருமையினைப் பாடலானார்
எண்ணியபின் துணிந்திடுக கருமம் என்றார்
எல்லோர்க்கும் நன்றாகும் பணிதல் என்றார்
மண்ணகத்தே உய்வதற்கு நெறிகள் சொன்னார்
வள்ளுவரை உள்ளுவதாற் பெருமை கொள்வோம்.

--ம. பார்வதிநாதசிவம்

# ஆயிரத்திற்கு மேற்பட்டோர் இலவசசிகிச்சை பெற்றனர்

[கிளிநொச்சி]

கிளிநொச்சி — பரந்தன் றோட்டறிக் கழகமும் ஜெய்ப்பூர் ஸ்ரீலங்கா நிறுவனமும் இணைந்து செயற்கைக்கால் பொருத்தும் இலவச கண் சிகிச்சை முகாம் ஒன்றை நடத்தினார்கள். றோட்டறிக் கழகத் தலைவர் திரு. ஆ. குலசேகரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இச் சிகிச்சை முகாமில் றோட்டறிக் கழகச் செயலாளர் டாக்டர் என் ஸ்ரீதரன், கரைச்சி நிறைவேற்று செயலாளரும்றோட்டறியனுமான கவிஞர் ப. வை. ஜெயபாலன், கிராமோதய சபைத்தலைவரும் றோட்டறியனுமான அதிபர் திரு தர்மரத்தினம் ஆகியோர் விசேஷ பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டனர்.

ஆயிரத்துக்கு மேற்பட்ட கண் நோயாளர்கள் சிகிச்சை பெற்றனர். கண் சிகிச்சை நிபுணர் பி சிவசுப்பிரமணியம் தலைமையிலான ஜெய்ப்பூர் ஸ்ரீலங்கா நிறுவன வைத்திய நிபுணர்குழு சிகிச்சைகளை அளித்தது. (ஈ)

விவசாயிகள்

# குளத்து நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டுகோள்

(கிளிநொச்சி)

இரணைமடுக்குளத்தில் நீர் பெறும் விவசாயிகள் கூட்டம் கிளிநொச்சி ஈஸ்வரன் படமாளிகையில் நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு. கே. குமாரசாமி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம், கமநலசேவை உதவிஆணையாளர் திரு. கே. பரமலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். ஐநூறுக்கு மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் இரணைமடுக்குள அபிவிருத்தி பற்றியும் சிறுபோகத்திற்கு நீர் வழங்குவது பற்றியும் ஆராயப்பட்டதுடன் சிக்கனமான முறையில் விவசாயிகள் குளத்துநீரைப் பயன்படுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள்விடுக்கப்பட்டது.




★ சர்வோதயம் ★ கிராமோதயம் ★ மாவட்ட அபிவிருத்தி

★ தேசோதயம் இவ்வாறு எல்லோரும் மேம்பாடு அடைதல்வேண்டும் என்று மகாத்மா காந்தி, இரவீந்திரநாத் தாகூர், சுப்பிரமணிய பாரதியார் முதலாய பெருமக்கள் பாடுபட்டார்கள், வழிகாட்டினார்கள்.

இவர்கள் சொன்ன வழியில் மில்க்வைற் தொழிலகத்தார் தங்களால் இயன்றவரை பன்முகமாகப் பணிசெய்கின்றார்கள்.

உங்கள் அபிமானமும் ஆதரவும் தொழிலகத்தாருக்குத் தேவை.

மில்க்வைற் சேவை விசாலிப்பதற்கு மில்க்வைற் தயாரிப்பதற்கு அபிமானிகள் ஆதரவு பெருகுதல் வேண்டும்.

மில்க்வைற் புதிய தயாரிப்பு சுப்ப-மில்க்வைற்-சோப்

ஒரு கட்டி விலை ரூபா 4/- மட்டும்.

2 மேலுறைகளுக்கு யோகாசனப் படமும், சாந்திப்படமும் இனாம்.

★ ஆதரவு பெருகினால் நற்பணி பெருகும் ★

★ மில்க்வைற் ★







# ரூபவாஹினியில் இன்று

மாலை 6-00 இன்றைய நிகழ்ச்சிகள்.

6-01 — சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்)

6-30 — சிறப்பு நிகழ்ச்சி (ஆங்கிலம்)

7-00 — செய்தி மஞ்சரி (தமிழ்)

7-14 — நாளைய நிகழ்ச்சிகள்

7-15 — 'கொத்மலை வருணை' சிங்கள நிகழ்ச்சி

7-45 — விசேட நிகழ்ச்சி (ஆங்கிலம்) பகுதி-I

8-15 — செய்தி மஞ்சரி (சிங்களம்)

8-29 — நாளைய நிகழ்ச்சிகள்

8-30 — விசேட நிகழ்ச்சி (தொடர்ச்சி)

9-00 — இளைஞர்கள் பற்றி சிறப்புப்படம் (ஆங்கிலம்)

9-30 — செய்தி மஞ்சரி (ஆங்கிலம்)

9-45 — 'சாரிளிஸ் ஏஞ்ஜல்ஸ்' (பகுதி-II)

# "மீண்டும் இவரையே நியமிக்கவும்"

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரிவு விவாகப் பதிவாளராகவும், நாவற்குழிப்பிரிவு பதில்பிறப்பு இறப்புப் பதிவாளராகவும் கடந்த இரண்டரை வருடங்களாகப் பணியாற்றிய திரு. ஆறுமுகம் கந்தையாவின் இடத்துக்குப் புதிய ஒருவரை நியமித்தமைகுறித்து கைதடி நாவற்குழிப் பகுதியிலுள்ள சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் அதிருப்தி தெரிவித்து எதிர்க்கட்சித்தலைவர், சாவகச்சேரிப் பாராளுமன்ற உறுப்பினர், உள்ளூராட்சி அமைச்சர் ஆகியோருக்கும் முறையீடு செய்துள்ளனர்.

இந்நியமனம் பாரபட்சமானதெனவும், எல்லாத் தகுதிகளும் பொருந்திய திரு. ஆறுமுகம் கந்தையாவையே மறுபடியும் நியமிக்கவேண்டுமெனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கு பிடிஆணை!

[கிளிநொச்சி]

பல்லவராயன்கட்டு சுஜாதி தோட்டக் கொலைமுயற்சி வழக்கில் ஆஜராக வேண்டிய பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவருக்குப் பிடிஆணை பிறப்பிக்கப்பட்டது.

1982-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ம் திகதி பல்லவராயன்கட்டு சுஜாதி தோட்டத்தில் வேலைசெய்யும் முதியன்சலாகே சோமசிறி என்பவருக்கு வேண்டுமென்று துவக்கால் சுட்டுக்கொலை செய்ய எத்தனித்ததாக அதே தோட்டத்தில் வேலை செய்யும் சமரக்கோன் முதியான்சலாகே கிரிபண்டா என்பவருக்கெதிராகக் கிளிநொச்சிப் பொலிசாரால் கிளிநொச்சி நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நீதிபதி கே. சதிரவேற்பிள்ளை முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் ஆஜராக வேண்டிய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திசநாயக்கா நீதிமன்றத்தில் சமுகமளிக்காததைத் தொடர்ந்து பிரஸ்தாப பொலிஸ் இன்ஸ்பெக்டருக்குப் பிடிஆணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

எதிரிதரப்பில் சட்டத்தரணி எஸ். அம்பிகைபாகன் ஆஜரானார். பொலிஸ்தரப்பில் சார்ஜண்டுகள் இ. திருஞானசம்பு, எம். சாந்தகுமாரும் வழக்கை நடத்தினார்கள்.

# சைக்கிள் டியூப் தட்டுப்பாடு ஏன்?

(யாழ்ப்பாணம்)

சைக்கிள் டியூப்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகப் பாவனையாளர் புகார் தெரிவிக்கிறார்கள்.

இத்தட்டுப்பாட்டைச் சாதகமாகக் கொண்டு, சில கடைக்காரர் அதிக விலைக்கு விற்பதாகவும் கூறப்படுகிறது.

சில கடைகளில் சைக்கிள் டயர் வாங்குபவர்களுக்கு டியூப் விற்கப்படுகிறது என்ற நிபந்தனையும் விதிக்கப்படுகிறதாம்.

உள்நாட்டில் தயாரிக்கப்படும் இந்த டியூப் வகைகளுக்கு ஏன் தட்டுப்பாடு என்பது புதிராக உள்ளதாகவும், உற்பத்தி குறைவா அல்லது கள்ளச் சந்தைக்காரரின் பதுக்கலா இதற்குக் காரணம் என்று தெரியாமல் இருப்பதாகவும் பாவனையாளர் ஒருவர் தெரிவித்தார். (மா—இ)

## பயிற்சி வகுப்பு

(வவனியா)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார் முதலான பகுதிகளைச் சேர்ந்த சாந்திய சிறுவர் பாடசாலை ஆசிரியைகளுக்கான ஒரு மாதப் பயிற்சி வகுப்பு கடந்த வாரம் வவனியாவில் நடைபெற்றது. (வெ)

## காங்கேசனில் ஜிப்சம் கப்பல்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறைத் துறைமுகத்திற்கு வந்துள்ள இந்தியக்கப்பலிலிருந்து ஜிப்சம் இறக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கென 13 ஆயிரம் தொன் ஜிப்சத்தை 'லோக் சகாய' என்னும் இந்தியக் கப்பல் பாகிஸ்தானிலிருந்து ஏற்றிவந்துள்ளது. (இ)

## யாழ் ஆஸ்பத்திரி கூட்டுறவு நல விருத்திச் சங்கம்

[யாழ்ப்பாணம்]

யாழ் ஆஸ்பத்திரி கூட்டுறவு நலவிருத்திச் சங்க புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் திரு சி. திலகர், உப தலைவர் திரு கே. செல்வராசா, தனாதிகாரி திரு க. கிருஷ்ணராசா, உப தனாதிகாரி திரு ச. கணேஸ்

மற்றும் திருவாளர்கள் சி. பாலசிங்கம், பரிஞ்ஞாந்து, கே. வி. துரைராசா, ஞானப்பிரகாசம், பே. எட்வேட், வே. கவீந்திரன், எஸ். பாலரட்ணம், க. தியாகராசா, செல்வி இ. சுப்பிரமணியம், செல்வி வி. தெய்வநாயகி ஆகியோர் நிர்வாக உறுப்பினராகத் தெரிவாகினர். (மா)

## கடன்சபை தலைவராக நியமனம்

(மாவிட்டபுரம்)

வடமாநில கல்வித்திணைக்கள கடன்சபை தலைவராக வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை கடன்சபை திணைக்களத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஏற்கனவே தலைவராக இருந்த வடமாநில கல்வித்திணைக்கள கணக்காளர் திரு. நா. திருநாவுக்கரசு இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்தே மேற்படி நியமனம் செய்யப்பட்டுள்ளது. (க)





நெடுந்தூர ஓட்டத்துக்குக் கச்சிதமானது லோட்டஸ் டயர்களும் டியூப்களும் இலங்கையின் அதிநவீன தொழிற்சாலையில் ஜப்பானிய கைத்தொழில் தரநிர்ணய விவரணங்களுக்கிணங்க உற்பத்தி செய்யப்பட்டு இலங்கைக் கட்டளைகள் பணியகத்தால் அங்கீகரிக்கப்பட்டவை. இவை தரத்திற் சிறந்த இயற்கை ரப்பரையும் இறக்குமதி செய்த மூலப் பொருட்களையும் கொண்டு கடும் தரக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு உருவானவை. ஆதலின் நீடித்துழைக்கின்றன.

| | | கொழும்பு | மற்றைய இடங்களில் |
|---|---|---|---|
| சாதாரணம் | டயர்கள் | ரூ 39.75 | ரூ 40/- |
| | டியூப்கள் | ரூ 11.40 | ரூ 11.50 |
| தொடுப்பு இல்லாதது | டியூப்கள் | ரூ 14.60 | ரூ 14.70 |

லோட்டஸ் டயர்களும் டியூப்களும் ஒல்லாந்து, பெல்ஜியம் மற்றும் பல ஐரோப்பிய, ஆசிய நாடுகளிலும் பாவிக்கப்படுகின்றன. கரடுமுரடான பாதைகளிலும் இவை கடுமையாக உழைக்கின்றன.

ஜப்பானிய தொழில் நுட்ப முறையைக் கையாண்டு இன்றுவரை 250 இலட்சம் உற்பத்தி செய்து இலங்கையிலும் வெளிநாடுகளிலும் விற்பனையாகியுள்ளன.

அசோஸியேட்டட் ரப்பர் இண்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட்,
185, யூனியன் பிளேஸ், கொழும்பு-2 தொலைபேசி : 33371—8
(அசோஸியேட்டட் மோட்டர்வேஸ் குழுவின் ஓர் அங்கம்)

## சாரணரை மேலும் பண்படுத்தும்
# 3வது தேசிய ஜம்போரி

1907ம் ஆண்டில் இருபது சிறுர்களுடன் பிறவி. தீவில் ஆரம்பிக்கப்பட்ட சாரண இயக்கம் உலகம் பரந்த அளவில் 159 நாடுகளில் 17 மில்லியனுக்கு மேற்பட்ட சாரணர்களைக் கொண்டதாக இன்று செயலாற்றி வருகிறது. இவ்வியக்கத்தில் இலங்கையில் சுமார் ஆறுபிரம் சாரணர்கள் இணைந்து செயலாற்றி வருகிறார்கள்.

இலங்கையில் முதலாவது தேசிய சாரணர் ஜம்போறி 1952-ம் ஆண்டிலும், இரண்டாவது ஜம்போரி 1962-ம் ஆண்டிலும், நடைபெற்றது.

நேற்று 3-வது தேசிய ஜம்போறி அநுராதபுரத்திலுள்ள ஹரிச்சந்திர பூங்காவில் ஜனாதிபதி மாண்புமிகு ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து எட்டு நாட்கள் நடைபெறும் இந்த ஜம்போறி உலக சாரணியத்தின் 75-வது ஆண்டு பூர்த்தியையும், இலங்கையில் சாரணியம் அமைக்கப்பட்ட 70-வது ஆண்டு பூர்த்தியையும் நினைவு கூருவதாக அமையவிருக்கிறது.

இந்த 3-வது தேசிய ஜம்போறியில் அகில இலங்கையைச் சேர்ந்த 3500 சாரணர்களும் 500 பிறநாட்டுச் சாரணர்களும் உலக சகோதரத்துவத்தை நிலைநாட்டுவதற்காகக் கலந்து கொள்ளுகின்றனர்.

யாழ். மாவட்டத்திலிருந்து யாழ். மத்தியகல்லூரி, யாழ். பரியோவான் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி, யாழ் சம்பத்தரிசியார் கல்லூரி ஆகியவற்றுடன் இன்னும் பல கல்லூரிகளைச் சேர்ந்த 145 சாரணர்கள்கள் யாழ் மாவட்டச் சாரண ஆணையாளர் திரு. க. சச்சிதானந்தம் தலைமையில் இந்த ஜம்போரியில் கலந்து கொள்ளுகின்றனர்.

இலங்கையில் நடைபெறும் இந்த மூன்ருவது தேசிய ஜம்போறி னங்களுக்கிடையே தேசிய ஒற்றுமையையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் என்பது திண்ணமாகும்.

இந்த ஜம்போரியில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு சாரணனுதும் தன்னுலானதை நாட்டுக்கும் தனது சூழலுக்கும் செய்யவேண்டிய கடமைப் பாடுடையவர்களாக, மேலும் பண்படுத்தப்படுவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இ. தனஞ்செயன்
கடற்சாரணர் யாழ்.
பரி. யோவான் கல்லூரி

## 'இன்பதுன்பம் இரண்டையும் ஒன்றுகக்காண்பவன் ஞானி'
### கம்பன் விழாவில் பேராசிரியர்

(மாவிட்டபுரம்)

"இன்பம் வரும்போது இன்பத்தையும், துன்பம்வரும் போது துன்பத்தையும் காண்பவன் ஞானியாகிவிடமுடியாது. இன்பத்திலும், துன்பத்திலும் வேறுபாடு காணுதவனே ஞானியாகமுடியும் ஞானம் ஏற்படக்கூசல் வேறுபாடு இருக்காது. எல்லாம் ஒன்று என்ற நிலை வந்துவிடும். அந்த உயர்ந்த நிலைக்கு எம்மை நாம் உயர்த்திக் கொள்ளமுயலவேண்டும்."

இவ்வாறு இணுவில் கம்பன் கழகம் எடுத்த கம்பன் விழாவில் கலந்துகொண்டு 'வாலி மோட்சம்' என்னும் தலைப்பில் உரையாற்றிய தமிழ்நாடு பேராசிரியர் திரு. இரா.இராதாகிருஷ்ணன் கூறினர்.

இணுவில் கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் பண்டிதர் ந. இராசையா தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''கம்பன் இராமனின் பக்தனுகி அவனைத் தெய்வமாகப் பூஜித்தே கம்பராமாயணத்தை உருவாக்கினுன். கம்பன் காலத்திற்கு முன் நாராயணனையே இராமனுக்கருதி மக்கள் வழிபாடு செய்தனர். ஆனுல் கம்பன் இராமனைத் தெய்வமாகப் படமபிடித்துக் காப்பியம் செய்தபிறகு இராமனுக்குக் கோவில்கள் எழுப்பப் பட்டன. இராமனுக்கு தனிக் கோவில் அமைத்து வழிபாடு செய்யுமளவுக்கு இராமனை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தவன் கம்பனே.

### வாலி வதையின் அவசியம்

இராமன் வாலியை ஒளிந்து நின்று கொன்றதால் அவனது வீரம் நகைப்பிற்கிடமாகிவிட்டது என நினைப்பது தவறு. வாலி சிவபெருமானின் வரத்தைப் பெற்றவன். இராம அவதார தத்துவம் நிறைவேற வேண்டுமானுல் வாலியைக் கொல்லவேண்டிய அவசியம் இருந்தது. இராமன் வாலியின் நண்பனுகமாறியிருந்தால் மிகப் பலம் வாய்ந்தவனுன வாலி சீதையை மீட்டுக் கொடுத்திருக்க முடியும். வாலியின் சக்தி அப்படிப்பட்டது. வாலியின் வால் செல்லாத இடத்திலேயே இராவணனின் கோல் (ஆட்சி) செல்லும் என்றும் கூறுவார்கள். ஆகவே அவ்வாறு நடந்திருந்தால் இராம அவதார தத்துவம் நிறைவேருமல் போயிருக்கும். ஆகவே தான் வாலிவதை அவசியமானதாக இருந்தது.

இராமன் வாலியைக் கொன்

[9-ம் பக்கம் பார்க்க]

## விஞ்ஞான தினம்

(புலோலி)

இலங்கை விஞ்ஞான முன்னேற்றக் கழக விஞ்ஞான அறிவியல் பரப்புக்குழு கல்வித் திணைக்களத்துடன் இணைந்து யாழ்ப்பாணம், மன்னூர், வவனியா, முல்லைத்தீவு மாவட்ட உயர் வகுப்பு விஞ்ஞான மாணவர்களுக்கான விஞ்ஞான தினத்தை நடத்துவதற்கான நடவடிக்கைகளைமேற்கொண்டு வருகின்றது.

இவ்விஞ்ஞான தினம் யாழ்ப்பாண மாவட்டத்தில் மே மாதம் 16ம், 17ம் திகதிகளிலும் மன்னூர் மாவட்டத்தில் 18ம் திகதியும், வவனியா மாவட்டத்தில் 19ம் திகதியும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 20ம் திகதியும் நடைபெறவுள்ளன.


இவ்விஞ்ஞான தினத்திலே விஞ்ஞானக் கருத்தரங்குகளும் விஞ்ஞானப் பேச்சுப் போட்டிகளும, விஞ்ஞானவிஞப்போட்டிகளும், படக் காட்சிகளும் பொருட் காட்சிகளும் இடம் பெறுமெனவும் இந்நிகழ்ச்சிகள் பல்கலைக்கழகப் பேராசிரியர்களாலும், விரிவுரையாளர்களாலும் நடத்தப்படுமெனவும், இப்போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கான பரிசில்கள் இலங்கை விஞ்ஞான முன்னேற்றக் கழகத்தின் வருடாந்த மாநாட்டில் வழங்கப்படுமெனவும் இலங்கை விஞ்ஞான முன்னேற்றக் கழக அறிவியல் பரப்புக்குழு விஞ்ஞான தின அமைப்பாளரும் பேராசிரியருமான திரு வி கே. கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

CENTRIC Robin

# சென்ட்றிக் விலை அதிகம் தான் - ஆனுல் ஒரு போகம் பயிர் செய்தே மிகுதி விலையை மீட்டு விடலாம்.

சென்ட்றிக் விவசாய நீரிறைக்கும் பம்ப் மட்டுமே ரொபின் அல்லது சிங்க இயந்திரங்களுடன் பிணைக்கப் பட்டு இயங்கும் பம்ப். எரிபொருள் சேமிக்கவும் நீடித்துழைக்கவும் என்றே உருவாக்கப்பட்டது அது. எனவே அதிக விலை கொடுத்து வாங்கினுலும் காலக்கிரமத்தில் மிகவும் அதிக சிக்கனத்தை அது தருகிறது.

தன்னியக்க முறையில் அது மண்ணெண்ணெயில் மாறி இயங்கத் தொடங்குவதால் எரிபொருள் வீணுவதில்லை. இயந்திரத்தை மறுபடி இயக்கத் தொடங்குவதும் துரிதம்; சுலபம். 4.5 லீட்டர் (ஒரு கலன்) மண்ணெண்ணெயில் சென்ட்றிக் ஜூனியர் 5 மணி 15 நிமிட நேரமும் சென்ட்றிக் சீனியர் 3 மணி 45 நிமிட நேரமும் இயங்கும்.




சென்ட்றிக் பம்ப் முற்றிலும் தருகிற பல்வேறு சிறப்புப் பயன்கள்.

- எரிபொருளில் மண்டி கலவாமல் பேணும் உள்ளமைந்த பிளாஸ்திக் வடிகட்டி. துடைக்க அழுக்குத் துண்டு துணி தேவையில்லை.
- எரிபொருட் பாதையில் அழுக்கை அகற்ற வசதியாக, அழுக்கைத் தடுத்துக் காட்டிக் கொடுக்கும் கண்ணுடிக் குமிழ் வடிகட்டி. எரிபொருட் குழாயில் அடைசல் கிடையாது.
- அதிர்வைத் தாங்கும் வகைவுள்ள, 5 வருட உத்தரவாதம் கொண்ட எரிபொருட் குழாய்கள். குழாய்கள் வெடிப்புறும் அபாயமில்லை.
- எண்ணெயிட்டுப் பராமரிக்கத் தேவையற்ற பெரிய விட்டம் கொண்ட காற்றுச் சுத்திகர வடிகட்டி இணைப்பு.
- தன்னியக்க முறையில் பெட்ரோலிலிருந்து மண்ணெண்ணெயில் மாறி இயங்கும் எரிபொருட் சிக்கனத் தனித்துவ அமைப்பு.
- இலகுவாக இயக்கக்கூடிய வேகக் கட்டுப்பாட்டு விசை.

சென்ட்றிக் விவசாய நீரிறைக்கும் பம்ப் வாங்கச் செலவு அதிகம்; இயக்கச் செலவோ மிகக் குறைவு. போதியளவு மாற்றுறுப்புகள்.

திறமையான பணியாட்கள் வழங்கும் நம்பகமான விற்பனைப்-பின்-சேவை.

விலைகள்: ரூ. 4,380/- தொடக்கம்.

J ஜினசேன லிமிட்டெட் உற்பத்தி

வட மாகாணத்தில் விற்பனையும் சேவையும் வழங்கும் எங்கள் விநியோகஸ்தர்கள்: நியூடோன் எலக்ட்றிக்கல்ஸ், யாழ்ப்பாணம்.
மேலும் கிடைக்குமிடங்கள்: துர்கா ஒட்டோ ஹாட்வெயர், யாழ்ப்பாணம். ஒட்டோ ஏஜன்சீஸ், வவுனியா.
மற்றும், வட மாகாணம் எங்கும் உப வியாபாரிகள்.

M.I Ads 1481




ஏஎம்டபிள்யூ தொழில் நுட்பத்தையும் நவீன இயந்திரங்களையும் உபயோகப்படுத்தி இலங்கையில் டயர் புதுப்பித்தலை ஒரு கலையாக்கியுள்ளது.

ஏஎம்டபிள்யூவின் புதுப்பித்த டயர்கள் தரத்தில் மிகவும் சிறந்தவை காரணம் முப்பது வருட அனுபவத்தின் பயன்.

ஏஎம்டபிள்யூ டயர் புதுப்பித்தலில் இலங்கையில் முன்னோடிகள்......

இரண்டு வாரங்களில் :
900 x 20
825 x 20
750 x 20 Town/Country

மற்றவை மூன்று வாரங்களில்



TEAM

AMW அசோஸியேட்டட் மோட்டார்வேய்ஸ் லிமிட்டெட்
185, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. தொலைபேசி: 33371—8.

ஏஎம் டபிள்யு புதுப்பித்த டயர்களுடன் பணத்தை சேமியுங்கள்

பெருமளவில் கையிருப்பிலுண்டு
இறக்குமதி செய்யப்பட்ட

★ பிளைவூட் சீற்
★ டெக்கரேட்டட் பிளைவூட் சீற் (வர்ணம் பூசிய)
★ அலங்கார கதவு

அனைத்திற்கும் நற்பெயர் பெற்ற நிறுவனம்

நாபன்ஸ் டிரேட்ஸ்

74, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். போன்: 24162


## இன்றைய...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மிதுனம்: மக்கள் பணியே மகேசன் பணியாகக்கருதி புண்ணியாஸ்திரர்கள் மகிழ்ச்சி அடைவார்கள், புதுமையான எண்ணங்களில் மனம் நாடும்.

கடகம்; பணத்தை அள்ளி வீசினாலும் பலன் அளிப்பதில்லை, உதவி செய்யப்போய் உபத்திரம் தானாக வந்து உற்றும், கொடுக்கல் வாங்கல் உறவைக் கெடுக்கும்.

சிங்கம்: குடும்பத்திலும் தொல்லைகள் அதிகரிக்கப்படும், குறுக்குவழித் தலையிடி குழப்பத்தில் வீழ்த்திவிடும், வெளியிடம் செல்வதில் தடை போடப்பட்டுவிடும்.

கன்னி: நேர்முகப் பரீட்சையில் சித்தியடையக்கூடிய தினம், இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள்.

பொறுத்த சமயத்தில் ஆதரவு கிடைக்கும்.

துலாம்: மனையில் பூசல்கள் தோன்றிக் கொள்ளப்படும், தொழில் புரியும் இடத்தில் பெண்களால் விபரீதங்கள் உருவாகலாம், கட்டுப்பாடும் அடக்கமும் வேண்டும்.

விருட்சம்: புலவர்கள் போற்றப்படுவதில் சிலர் ஈடுபடுவார்கள், வாகனம் ஓட்டுவோர் நற்சான்றிதழ் பெறுவார்கள், பிரிந்தவர் வாழ்வில் மீண்டும் இணைவார்கள்.

தனு: வார்த்தை ஜாலம் செய்வதன் மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள், பெரிய இடத்து உறவில் முன்னேற்றம் காணப்படும், நல்லதைச் செய்வீர்கள்.

மகரம்: பகைவர்கள் பதுங்குவார்கள், பாதையில் தடைகள் உண்டு, நம்பிக்கைமோசடி மூலம் பொருள் பறிபோகலாம், முன்னெச்சரிக்கையும் அவதானமும் வேண்டும்.

கும்பம்: கருத்தொருமித்த காதலால் வாழ்வில் மறக்க முடியாத சம்பவங்கள் நிகழலாம், எதிரிகள் மறைந்து சாதகமான சூழ்நிலை உருவாகும், கண்ணியம் சேரும்.

மீனம்: இனம் தெரியாத கவலையால் சோர்வடைவீர்கள், வாய்வுப் பதார்த்தர்களைத் தவிர்த்துக் கொள்ளவும், சகோதரதழியால் கவலைகள் தோன்றக்கூடும்.

திருமலை
க. வேலுப்பிள்ளை.

## இன்பதுன்பம்...

[7ம் பக்கத் தொடர்ச்சி]

றான். அவன் எடுத்த உடம்பை, அது அழியக்கூடியதாகும். அதே நேரம் அவன் கொடுத்தது முத்தியை. அது என்றும் அழிவில்லாதது'' என்றார்.

கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை தலைமையில் கவியரங்கொன்றும் நடந்தது. அதில் அரியாலையூர் ஐயாத்துரை, சோ. பத்மநாதன், அ குமரன் ஆகியோர் பங்குபற்றினர்.


சென்னை - ரூபவாகினி
நிகழ்ச்சிகளைத் தெளிவாக கண்டுகளிக்க
தொலைக்காட்சி ஏரியல் அமைப்பிற்கு
வீனஸ், நியூவீனஸ்

ரி. வி., றேடியோ, மணிக்கூடுகளை உத்தரவாதத்துடன் பழுதுபார்த்துக் கொள்ளவும்
புதிய ரி. வி., றேடியோ மணிக்கூடுகளை வாங்கிக்கொள்ளவும்,
விரும்பிய பாடல்களை பதிவுசெய்து கொள்ளவும்,
மற்றும் மங்கள வைபவங்களை வீடியோவில் படம் பிடித்துக்கொள்ளவும்,
மேலும் யாழ். நகரில் உத்தரவாதத்துடன்
ரி. வி. ஏரியல் பொருத்திக்கொள்ள

வீனஸ் 266/1, ஸ்ரான்லி வீதி, (ஸ்ரீதர் தியேட்டர் அருகில்) யாழ்ப்பாணம்.

நியூவீனஸ் 79/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

றீகல் (யாழ். நகர்)
கடைசி வாரம்
எங்க வீட்டுப் பிள்ளை
விரைவில்
சட்டம் ஒரு இருட்டறை

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் - ராதிகா
கிழக்கே போகும் ரயில் (கலர்)
3-3-83 வரையும்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
என் அண்ணன்

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே


வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி- 6-15, 9-15
சனி. ஞாயிறு 2-30
சிவாஜி - விஜயா
ராமன் எத்தனை ராமனடி

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30, 9-45
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி - பாலாஜி
நம்பியார், எம். ஆர். ராதா
என் கடமை
புத்தம் புதிய பிரதி

சில தினங்கள் மட்டும்
மனோகரா தினசரி
[யாழ். நகர்] 10-30, 2-15 6-00, 9-45.
என். டி. ராமராவ், கே. மாலதி, எஸ். வி. ரங்கராவ், ரேலங்கி
பாதாள பைரவி

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-30
கமலஹாசன் - ஸ்ரீதேவி
குரு

மீண்டும் கிடைக்கின்றது




ஜப்பானிய பம்ப் தெழில் நுட்பமும் அமெரிக்க என்ஜினும்.

"டெர்க்காய்" தன்இயக்க விவசாய நீர் இறைக்கும் இயந்திரம் "பிறிக்ஸ் & ஸ்ரற்றன்" என்ஜினுடன் இணைக்கப்பட்டு இப்போது ரூ. 5200/-க்கு கிடைக்கின்றது.

★ நீர் இறைக்கும் அளவு மணிக்கு 27000 லீட்டர் (6000 கலன்)
✶ மண்ணெண்ணை கொள்வனவு மணிக்கு 0.75 லீட்டர் (0.16 கலன்)
✶ மொத்த நிறை 28 கிலோ (61 றுத்தல்)
✶ ஒரு வருட உத்தரவாதமும் நாடெங்கிலும் உதிரிப்பாகங்களும் கிடைக்கும்.

பொறியியல் விற்பனை, சேவைப் பிரிவு,
ஹேலீஸ் லிமிட்டெட்
25, ஃபொஸ்டர் ஒழுங்கை கொழும்பு 10. தொலைபேசி 91181

Mel Ads

கடைசி சில தினங்கள்
வின்ஸர் (யாழ். நகர்)
வசந்த மாளிகை
(புதிய பிரதி)
11-3-83 முதல்
மகாசிவராத்திரி வெளியீடு!
சிவகுமார் - சரிதா - சில்க் சுமிதா
வண்டிச்சக்கரம்
(கலர்)

குறிப்பிட்ட தினங்கள் மட்டும்
ராஜா (யாழ்- நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
சிவாஜி - சாவித்திரி - தேவிகா
கர்ணன் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி (சஸ்ட்மன் கலர்)
பாடசாலை பிள்ளைகளுக்கு விசேட ஒழுங்குகள் செய்து தரப்படும். முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.
எமது அடுத்த வெளியீடு
துணி வேதுணை

சில தினங்கள் மட்டும்
ராணி (யாழ். நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
ஆந்திர முதலமைச்சர் என். டி. ராமராவ், ஜெமினி - சாவித்திரி நடித்த
மாயா பஜார்
வருகிறது!
தேடிவந்த மாப்பிள்ளை
(புதிய பிரதி)

"வெளிநாடுகளிலுள்ள தமிழ் இளைஞர்களுக்கு

# நான் அனுப்பும் கடிதங்களை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றியுள்ளனர்!"

## யாழ். எம். பி. 'யோகேஸ்' தகவல்

(அரியாலை)

'வெளிநாடுகளிலுள்ள தமிழ் இளைஞர்களுக்கு நான் அனுப்பிய சிபார்சுக் கடிதங்களைப் பாதுகாப்புப்படையினர் கைப்பற்றியுள்ளனர் தபால் காரியாலயங்கள் மூலம் 50 கடிதங்களைப் பெற்ற பாதுகாப்புப் படையினர் இதுபற்றி என்னைப் பல தடவைகள் விசாரணை செய்துள்ளனர்.'

இத்தகவலை, நல்லூர்தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயப் புதிய மாடி கட்டடத்தைத் திறந்துவைத்த போது யாழ். எம். பி. திரு வி. யோகேஸ்வரனே தெரிவித்தார்.

பாதுகாப்புப் படையினர் விசாரணை செய்தபோது 'நான் தமிழன், நான் யாழ்ப்பாண எம். பி. மட்டுமல்ல, தமிழ் மக்கள் யாவருக்கும் உதவி செய்யும் எம். பி.' என்று கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் திரு. ப. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இத் திறப்பு விழாவில் திரு. வெ. யோகேஸ்வரன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: 'அறுநூறு நோயாளிகள் தங்கியிருந்து சிகிச்சை பெற அமைக்கப்பட்ட யாழ் அரசினர் வைத்தியசாலையில் இன்று இரண்டாயிரம் நோயாளிகள் தங்கியிருந்து சிகிச்சை பெறுகிறார்கள். போதிய வசதியில்லாத காரணத்தினால் நோயாளிகளில் 60 வீதமானோர் நிலத்திலே படுத்திருக்கிறார்கள். இந்த அவலநிலையை நீக்கும்படி நாம் அரசிடம் கோரிக்கை விடுத்த போது அரசு மௌனம் சாதிக்கிறது. இதனால் வடபகுதியைச் சேர்ந்த ஒவ்வொரு எம். பியும் ரூபா 50 ஆயிரத்தை இதற்கென ஒதுக்கீடு செய்து வருகிறோம்.

'மன்னாரையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் பாலமாக விளங்கும் மகாதேவா தாம்போதியை அமைக்கவும் நாம் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ளது. தென்பகுதியில் இப்படியான பாலமொன்றை அமைக்க வேண்டுமென்றால் பெருநிதி ஒதுக்கீடு செய்யும் அரசு எமது பகுதியென்றவுடன் கையை விரிக்கிறது.

மகாதேவா தாம்போதி வேலைகள் முடிவடைந்து விட்டால் யாழ்ப்பாணத்திலிருக்கு மக்கள் மன்னாரில் போய்க் குடியேறவும், தமிழ் பகுதியை பாதுகாக்கவும் இது உதவும்'.

# இப்படியும் நடக்கிறது

நேர்முகக்காலை ஐந்து மணி இருக்கும்.

கொக்குவில் கே. கே. எஸ். வீதிவழியாக வந்துகொண்டிருந்த சில இளைஞர்கள், வீதியில் வைத்து திடீரென வழி மறிக்கப்படுகின்றனர்.

விஷயம் புரியாது திகைத்துப் போன இளைஞர்கள், நல்லை ஆதீனம் செல்வதாகக் கூறவே 'அங்கு எதற்குச் செல்கிறீர்கள்' என்று கேள்வி தொடுக்கப்படுகிறது.

யோகாசன வகுப்புகளுக்கு என்று இளைஞர்கள் மீண்டும் பதிலளித்தனர். ஆனாலும் இளைஞர்களை 'அவர்கள்' விடுவதாக இல்லை. 'யோகாசனம் என்றால் என்ன? அதனை இங்கேயே செய்' என்று கட்டளை பிறக்கிறது!

பயமும் பீதியும் கொண்ட இளைஞர்கள் பகிரங்க வீதியில் வைத்து சில ஆசனங்களைச் செய்து காட்டுகின்றனர். அதன் பின்னர்தான் 'அவர்கள்' அந்த இடத்தை விட்டு நகர்ந்தனர்!

'யோகாசனங்கள் மிகப் புனிதமானவை. தெய்வாம்சம் பொருந்தியவை. இதனை, இராணுவத்தினர் நடுவீதியில் வைத்து கேலி செய்திருக்கிறார்களே...' என்று நல்லை ஆதீன சுவாமி ஸ்ரீ ஞானந்தயோகி மனம் வருந்தினர்.

— 'ஊடுருவி',

இராணுவ முகாமில் தாக்குதல்:

# வைத்திய அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிபதி உத்தரவு

[கொழும்பு]

திருக்கோயில் வங்கிக் கொள்ளை தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் சந்தேகநபர்களான பாஸ்கரன், தேவகுமார், தேவானந்தி ஆகியோர் பனாகொடை இராணுவமுகாமில் வைத்து இராணுவத்தினரால் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டதாக தாக்கல்செய்யப்பட்ட மனு மீது விசாரணை நடத்திய கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு. திஸ்ஸ பண்டார நாயக்கா அச் சந்தேகநபர்களை சட்டவைத்திய அதிகாரி அல்லது உதவி சட்டவைத்திய அதிகாரி பரிசோதித்து எதிர்வரும் மார்ச் மாதம் 16ம் திகதி நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டுமென்று உத்தரவிட்டார்.

பாஸ்கரன் தேவகுமார் ஆகிய இருவரும் இராணுவ முகாமில் வைத்து வேலை செய்யுமாறு பணிக்கப்பட்டு தாக்குதலுக்குள்ளானார்கள் என்ற மனு ஒன்றைத் தாக்கல்செய்த சட்டத்தரணி திரு. ஜி குமாரலிங்கம் தேவானந்தும் அதே முகாமில் வைத்து தாக்கப்பட்டதாக சத்தியக் கடதாசி மூலம் தெரிவித்தார்.

வைத்திய அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவு பிறப்பித்த நீதிபதி, இதுபற்றி மேலும் விசாரணை நடத்துவது அவசியமா இல்லையா என்பது பற்றி மார்ச் மாதம் 1ம் திகதி பரிசீலிக்கப்படும் என்றும் கூறினார்.

## விவசாயப் பணிப்பாளர் மன்னார் விஜயம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திற்கு மார்ச் மாதம் 2-ஆம் திகதி விஜயம் செய்யும் விவசாயப் பணிப்பாளர் திரு. ஜி. டபிள்யூ. ச. பெர்னாண்டோ உயிலங்குளம் விவசாயப் பயிற்சி நிலையத்தில் மன்னார் மாவட்ட இளைஞர் விவசாயக் கழகத்தினால் நடத்தப்படும் பொருட்காட்சியைத் திறந்து வைப்பார்.

இவர் மன்னார் மாவட்ட விவசாயிகள் கலந்து கொள்ளும் விவசாயக் கருத்தரங்கிலும் கலந்து கொண்டு உரையாற்றுவார். (அ)


## ஹோம் பினன்ஸ் லிமிட்

யாழ். புடவை வியாபாரிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பினன்ஸ் லிமிட், 82, கன்னதிட்டி வீதியிலுள்ள ஹோம் பினன்ஸ் ஸ்தாபனத்தில் பூகொடை ஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைக்கு உண்டு.

I. சாயமூட்டிய பொப்பிளின்

II. வெள்ளை பொப்பிளின்

III. பிறின்ரெட் பப்றிக்

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

ஹோம் பினன்ஸ் லிமிட்

82, கன்னதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (போன்: 24310)

தலைமைக் காரியாலயம்

ஹோம் பினன்ஸ் லிமிட்

463, காலி வீதி, கொழும்பு-3


## நாசவேலை காரண...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விமானத்தில் கோளாறு இல்லையென்று தெரிவித்துள்ளார்.

### 9-03 மணிவரை விமானம் பறந்தது

கோலாலம்பூரிலிருந்து விமானம் இம்மாதம் 13ம் திகதி இரவு 8-41மணிக்குப் புறப்பட்டது. இரவு 9-03மணிவரை விமானம் பறந்து கொண்டிருந்ததாக பட்டர்வேர்ட் விமானத்தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் விமானத்திற்கு என்ன நடந்தது என்பது பற்றித்தெரியவில்லையெனவும் விசாரணைகளில் கூறப்பட்டுள்ளது.

''சிங்கப்பூரிலோ, மலேசியாவிலோ வர்த்தக ரீதியில் திரு உபாலி விஜேவர்த்தனவுக்கு எதிரிகள் இருந்ததில்லை'' என்று அமைச்சர் தெரிவித்தார்.

### விசாரணை தொடருகிறது

உபாலி விமானம் காணாமல் போனமை தொடர்பாக இலங்கையின் குற்றப்புலனாய்வுத் துறை அதிபர் திரு. ஏ. ராஜபக்ஷவும், பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எம். ஜெயசூரியாவும் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

### இந்தோனேஷியா அறிவிப்பு

இதேவேளை உபாலி விமானத்தை தேடும் முயற்சியை இன்னும் சிலதினங்களுக்கு மேற்கொள்ளப்போவதாக இந்தோனேஷியா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் அதன்பின்னரும் விமானம் தொடர்பாக எந்தவிமான தடயங்களும் கிடைக்காத பட்சத்தில் தேடுதல் முயற்சி நிறுத்தப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்காவின் 'பி-3' விமானத்தை தேடுதல் முயற்சியில் மீண்டும் ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்தார். [வெ]

### வட்டுக்கோட்டை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

திரு நீலன் திருச்செல்வம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (மா)


யாழ் நகரில் முதன்முறையாக

SPECIAL ENGLISH COURSE

இரு முன்னணி ஆசிரியர்களின் இணைந்த சேவை

திரு. T. N. பஞ்சாட்சரம், R. S. நாயகம்

6 மாதத் தீவிரப்பயிற்சி

புதிய பிரிவு

ஆரம்பம் 9-3-83

பாடத்தொகுதி

ஆங்கில உரையாடல் பயிற்சி
இலக்கணமும் பாவனையும்
சொல்லியல் விருத்தி
வாசிக்க எழுதப் பயிற்சி

இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்

விபரங்களுக்கு: நேரில் / தபாலில்

அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## இன்று வள்ளுவர் விழா

[யாழ்ப்பாணம்]

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் இன்று பிற்பகல் திருவள்ளுவர் விழா நடைபெறவுள்ளது திருமதி வி. கணேசராசா தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் சீ கனகசபையின் இசைவிருந்தும், ''திருக்குறள்வாழ்க்கைப் பொதுநூலா?'' என்பது பற்றிய பட்டிமன்றமும் நடைபெறும். பட்டிமன்றத்தில் க உமாமகேஸ்வரன், செ. கதிரேசர்பிள்ளை, நா. அரியபுத்திரன், க. தேவதாசன் கலந்து கொள்ளவுள்ளனர். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## மரண அறிவித்தல்

### வே. சின்னையா

கொக்குவில் கிழக்கு, தேவாலய ஒழுங்கையைச்சேர்ந்த இளைப்பாறிய தபாலதிபரான திரு வே. சின்னையா 26-2-83 சனிக்கிழமை அன்று காலமானார். இவர் மனோன்மணியின் அன்புக் கணவரும், மகேந்திரன் பொறியியலாளர் Brunei Dr புவனேந்திரன் Brunei, பாலேந்திரன் O. C. P. நில அளவைத் திணைக்களம் முருங்கன், திருமதி ஜெகதீஸ்வரி ராஜேந்திரன், விஜயேந்திரன் பொறியியலாளர் M S Industries கோண்டாவில், யோகேந்திரன் கணக்காளர் சிங்கப்பூர், ஆகியோரின் அருமைத் தந்தையாரும். தேவயானி, திலகா, இந்திரா, Dr T. ராஜேந்திரன், ஈஸ்வரி மருத்துவமனை காங்கேசன்துறை, கமலாதேவி, நவசக்தி ஆகியோரின் அன்புமாமனாரும் ஆவார் தகனக்கிரியைகள் 28-ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் கொக்குவில் இந்துமயானத்தில் நடைபெறும். உறவினரும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

6364

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் பேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number Q. B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.